
வைபவ லக்ஷ்மி

பூஜையும் - கதையும்



GIRI TRADING AGENCY
SINCE 1951

சகல ஸெளபாக்யங்களும் தரும்

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ

பூஜையும் கதையும்

பதிப்பகத்தார்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

சென்னை

Book Name : SRI VAIBHAVA LAKSHMI (POOJA & KADHAI)
Language : Tamil
Copy Right : *GIRI TRADING AGENCY PRIVATE LIMITED*
Edition : 2^{nd}
Pages : 40
Price : Rs.**8.00**
ISBN No. : 81-7950-077-2
Book Size : Crown
Paper : Creamwove
Typesetting & Wrapper
Design by : *GIRI TRADING AGENCY PRIVATE LIMITED*

Copies can be had from our outlets

GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
Modi Niwas, Opp. Post Office, **MATUNGA**, Mumbai 400 019
Email Mumbai id : **giritradingagency@vsnl.com**

BRANCHES :

MYLAPORE
10, Kapaleeswarar Sannadhi
Street, Mylapore,
Chennai 600 004.

NANGANALLUR
8, 10th Street,
Near Raghavendra Temple,
Nanganallur, Chennai 600 061.

COIMBATORE
F6, T. M. House,
92, Thiruvenkatasamy Road,
R. S. Puram, Coimbatore 641 002.

KANCHIPURAM
5, Kamakshi Amman Sannadhi
Street, Kanchipuram 631 502.

MADURAI
15, North Tower Street,
(Opp. Mottai Gopuram)
Madurai 625 001.

SECUNDERABAD
Sri Subramanya Swami Devalayam,
Padmarao Nagar, Skandagiri,
Secunderabad 500 061.

DOMBIVILI
No.6, Arjun Co-operative Housing
Society, Shiv Mandir Road, Ram
Nagar, Near Sagar Dairy, Dombivili (E),
Mumbai - 421 201.

Seva Dham "A" Wing, Shripal Nagar,
Rajaji Path, Opp. Madrasi Mandir,
Dombivili (E), Thane Dist. 421 201.

GOREGAON
2, Siddhi Vinayak Apts,
Bangur Nagar, Goregaon (W),
Mumbai 400 062.

NERUL
S.I.E.S. Engineering & Computer
College Complex, Anjaneyar Temple,
Nerul, Navi Mumbai 400 706.

Email Chennai id : **giritrading@vsnl.com**
Website : **www.giritrading.com**

3/3

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ

பதிப்புரை

செல்வத்திற்கு தலைவியான மஹாலக்ஷ்மி எப்பொழுதும் எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவள். ஜாதி, மத, இன வேறுபாடில்லாமல் வணங்கத் தகுந்தவள். காரணம்? செல்வம் எல்லோருக்கும் அவசியம்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை. அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை' என்பது சான்றோர் வாக்கு, பொருளைக் கொண்டு இவ்வுலகிலுள்ள எல்லா இன்பங்களையும் அடையலாம். அதற்கும் அன்னையின் அருள் வேண்டும். உடல் வலிமை, மன வலிமை இவைகளை அளிப்பதும் மஹாலக்ஷ்மியே. அன்னையின் அருளைப்பொற்று இப்பிறப்பின் முடிவில் வானுலகிலும் சுகத்தை அடையலாம்.

எளிமையான முறையில் அம்பிகையை பூஜித்து வேண்டியவற்றை வேண்டுபவர் அடைய இந்த ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜையை முறைப்படி பூஜிக்க பக்தர்களுக்கு வழங்குகிறோம். தனலக்ஷ்மியே ஸ்ரீவைபவ லக்ஷ்மியாவாள். விஸ்தாரமாக எங்கும் நிறைந்து பக்தர்களைக் காப்பாற்று வதால் ஸ்ரீ வைபவலக்ஷ்மியென்று அழைக்கப்படுகிறாள். கிடைத்த செல்வத்தை அழியாமல் பாதுகாத்துத் தருபவளும் அன்னையே. இப்பூஜையை செய்து பலர் பயனடைந்துள்ளனர். பலர் எங்களுக்கு தெரிவித்தும் உள்ளனர். அவற்றுள் இரண்டை இப் புத்தகத்தில் காட்டியுள்ளோம். எனவே பலரும் பயனடையும் வண்ணம் இப்புத்தகத்தை அச்சிட்டு காஞ்சி ஸ்ரீ ஆச்சாரிய சுவாமிகளின் பாதகமலங்களில் ஸமர்ப்பிக்கின்றோம்.

பதிப்பகத்தார்.

ஸ்ரீ ரஸ்து

ஸ்ரீ கணேசா'ய நம:

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரத பூஜை

" ஸ்ரீ வைபவலக்ஷ்மீ" தனலக்ஷ்மியேயாவாள். ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரதம் எல்லோருக்கும் உரியது. வீட்டில் உள்ள பெண்கள் எல்லோரும் சேர்ந்து செய்யலாம். பெண்கள் இல்லாத வீட்டில் ஆண்களும் செய்யலாம். இது எளிதில் பலனளிக்கக்கூடியது. அவரவர்கள் வேண்டும் வரங்களை அன்னை ஸ்ரீ வைபவலக்ஷ்மீ அளிப்பாள். இந்த விரதத்தை மேற்கொள்வதால் ஸகல மங்களங்களும் உண்டாகும்.

வ்ரதம் எடுத்துக் கொள்பவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய முறைகள்

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ விரதத்தை வெள்ளிக்கிழமை யன்றுதான் தொடங்க வேண்டும். அது முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விரதம் இருந்து பூஜையை செய்து வரவேண்டும். நினைத்த காரியம் வெற்றிகரமாக முடிய பதினொன்று அல்லது இருபத்தோரு வெள்ளிக்கிழமை தொடர்ந்து செய்து வர வேண்டும். இதற்குள் வேண்டிக் கொண்ட காரியம் நிச்சயமாக நிறைவுறும். விரதத்தை கடைசி வெள்ளிக்கிழமை பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு வெள்ளிக்கிழமை இடையில் விட்டுப் போனாலும் பதினொன்று அல்லது இருபத்திஒன்று வெள்ளிக்கிழமை மொத்தமாகச் செய்ய வேண்டும்.

மிகவும் தூய்மையான மனத்துடனும், நம்பிக்கையுடனும், பக்தியுடனும் செய்ய வேண்டும்.

அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு அன்றாட வேலைகளை முடிக்க வேண்டும். நாள் முழுவதும் மனதை

ஸ்ரீ வைபவ லக்ஷ்மியிடம் செலுத்தி "ஜய மஹா லக்ஷ்மீ" என்ற ஜபத்தை செய்து கொண்டிருக்க வேண்டும்.

காலையிலிருந்து உபவாசம் இருந்து மாலை பூஜைக்குப் பிறகு ப்ரஸாதத்தை உணவாக உட்கொள்ளலாம். முடியாதவர்கள் இரவு பூஜைக்குப் பின் ஒரு வேளை உணவு அருந்தி அன்னை ஸ்ரீ மஹாலக்ஷ்மியிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இப்பூஜையை வீட்டிற்குள்ளேயோ, வெளியில் கோவிலிலோ செய்யலாம். தனியாகவும் செய்யலாம். பலர் சேர்ந்தும் செய்யலாம். பலர் சேர்ந்து செய்யும்போது பூஜா சாமான்களை அவரவர்கள் தனியாக கொண்டு வருதல் வேண்டும். 11, 21, 51, 101 பெண்கள் சேர்ந்து செய்யலாம்.

பூஜை ஆரம்பிப்பதற்கு முன் குறைந்த அளவு 1008 முறை "ஜய மாம் லக்ஷ்மீ" என்ற மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். கூடுதலாகவும் ஜபிக்கலாம். பூஜை மாலைவிளக்கு வைக்கும் நேரத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

அன்றைய தினம் வருட, அயன, ருது, மாத, பக்ஷ, வார திதி, நக்ஷத்ரங்களை பஞ்சாங்கத்தில் பார்த்து அறிந்து ஸங்கல்பத்தில் சேர்த்துக் கொள்ளவும்.

பூஜைக்குத் தேவையான பொருட்கள்

வெள்ளி, செம்பு, பித்தளை இவைகளில் ஏதாவது ஒன்றினால் செய்த குடம் அல்லது கலசம் அல்லது சொம்பு, தூய்மையான தீர்த்தம் (தண்ணீர்) தேன், பஞ்சாம்ருதம், கலசத்தின் மேல் வைக்கும் அளவுள்ள தட்டு அல்லது கிண்ணம், அரிசி, ஸ்ரீ வைபவ லக்ஷ்மீயந்த்ரம், அஷ்டலக்ஷ்மீ படம், மங்கள ஸூத்ரம் (தாலிச்சரடு) வெள்ளி, பவுன் அல்லது

சாதாரண நாணயங்கள், சந்தனம், குங்குமம், மஞ்சள் பொடி, புஷ்பம், வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், சர்க்கரை பொங்கல், தீபம், ஊதுவத்தி, கற்பூரம், மணை (ஆசன பலகை).

பூஜை செய்யும் முறை

பூஜை செய்யுமிடம் மிகவும் அமைதியும் தூய்மையும் உடையதாக இருக்க வேண்டும். அன்று மாலை கை கால்களை சுத்தம் செய்து கொண்டு தீபம் ஏற்றி வைத்து விட்டு ஒரு மணைப் பலகையை போட்டு கிழக்கு முகமாக உட்கார வேண்டும். ஆஸன பலகைக்கு முன் கோலமிட்டு அதன்மேல் அரிசியை சதுரமாக பரப்பி சமமாக நிரவி விட வேண்டும். அதன்மேல் பூர்ண கும்பம் போல் கலசத்தை ஏலம், கிராம்பு, பச்சை கற்பூரம், குங்குமப்பூ இவைகளைச் சேர்த்த தீர்த்தத்தால் நிரப்பி அதன் மேல் தட்டு அல்லது கிண்ணம் வைத்து நாணயங்களால் நிரப்ப வேண்டும். நாணயத் தட்டின் மீதோ அல்லது கலசத்தின் அருகிலோ ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ யந்த்ரத்தையும் ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ படத்தையும் வைக்க வேண்டும்.

கலசம், யந்த்ரம், அஷ்டலக்ஷ்மி படம் இவற்றிற்கு சந்தனம் குங்குமமிட்டு முடிந்தளவு புஷ்பத்தால் அலங்கரிக்க வேண்டும். கலசத்திற்கு முன் மஞ்சள் பொடியை தண்ணீர் ஊற்றி பிசைந்து பிள்ளையார் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். நிவேதனப் பொருட்களையும் கொண்டு வந்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு சங்கல்பம் செய்து விக்னேச்வர பூஜையையும், ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜையையும் செய்ய வேண்டும். பிறகு வைபவ லக்ஷ்மீ பூஜை வரலாற்றினைப் படிக்க வேண்டும், அல்லது பிறரைப் படிக்கச் சொல்லிக் கேட்க வேண்டும்.

பிறகு ஸ்ரீ வைபவ் லக்ஷ்மீ ஸ்தோத்ரம் செய்து முடிந்த வரையில் பஜனை செய்து சர்க்கரை பொங்கல் நிவேதனம் செய்ய வேண்டும். பிறகு கலசத்திற்கு ஆரத்தி எடுக்க வேண்டும். பிறகு கலச தீர்த்தத்தை தான் சிறிதளவு உட்கொண்டு, ப்ரோக்ஷித்துக் கொண்டு வீடு முழுவதும் ப்ரோக்ஷித்து வந்தவர்களுக்கும் தீர்த்தமாகக் கொடுத்து மீதியை துளசிச் செடியில் ஊற்ற வேண்டும். கீழ் உள்ள அரிசியை அரிசிப்பானையில் போட்டு வைத்துக் கொள்ளலாம்.

விரதத்தை பூர்த்தி செய்கின்ற அன்று 11, 21, 51 அல்லது 101 "ஸ்ரீ வைபவலக்ஷ்மீ வ்ரத பூஜா" புத்தகத்தை குங்குமமிட்டு தாம்பூலத்தில் வைத்து கொடுத்து ப்ரஸாதமும் கொடுக்க வேண்டும்.

பூஜையில் வைத்துள்ள நாணயத்தை பத்திரப்படுத்தி ஒவ்வொரு பூஜைக்கும் உபயோகப்படுத்தவும். அதை செலவு செய்யக்கூடாது.

அந்த ப்ரஸாதத்தையே தான் உட்கொண்டு உபவாஸ மிருக்கலாம். முடியாதவர்கள் பிறகு சைவ உணவு மட்டும் அருந்தலாம்.

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ விரதத்தை மேற்கொள்பவர்களுக்கும் அதில் கலந்து கொள்பவர்களுக்கும் செல்வம் பெருகும். அஷ்ட ஐச்வர்யமும் உண்டாகும். மனநிம்மதியுண்டாகும். நினைத்த காரியம் கை கூடும்.

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜை

ஸ்ரீ வைபவலக்ஷ்மீக்குரிய வெள்ளிக்கிழமை விரதம் ஏற்றவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீ வைபவ லக்ஷ்மிக்கு பூஜை செய்ய வேண்டும்.

ஸ்ரீ விக்னேச்வர பூஜை

(முதலில் விக்னேச்வர பூஜையைச் செய்த பிறகு ஸ்ரீ வையவ லக்ஷ்மீ பூஜை செய்ய வேண்டும்.)

(பூஜை ஆரம்பிக்கும்முன், கால் கைகளை சுத்தம் செய்த பின் ஆசமநம் செய்யவும். கையில் புஷ்பம், அக்ஷதை எடுத்துக்கொண்டு)

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே ||

என்று சொல்லித் தலையில் குட்டிக் கொள்ளவும்

ப்ராணாயாமம்

ஓம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓகும் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத், ஓமாப: ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.

ஸங்கல்பம்

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்'வர ப்ரீத்யர்த்தம்.

ததேவ லக்னம் ஸுதினம் ததேவ
தாராபலம் சந்த்ரபலம் ததேவ |
வித்யா பலம் தைவ பலம் ததேவ
ஸ்ரீ லக்ஷ்மீபதே: (அ)ங்க்ரியுகம் ஸ்மராமி ||

கரிஷ்யே மாணஸ்ய கர்மண: நிர்விக்நேந பரிஸமாப்த்யர்த்தம் ஆதௌவிக்னேச்'வர பூஜாம் கரிஷ்யே என்று அக்ஷதையை ஸங்கல்பித்து வடக்கே போடவும்:

மஞ்சள் பிள்ளையார் மீது பூஜிக்கவும்

கணாநாம்த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம் கவீநாம் உபமச்'ரவஸ்தமம் ஜ்யேஷ்ட்டராஜம் ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பத ஆந ச்'ருண்வந்நூதிபிஸ் ஸீத ஸாதனம்.

அஸ்மின் ஹரித்ராபிம்பே ஸுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி ஆவாஹயாமி என்று சொல்லி மஞ்சள் பிள்ளையார் மீது புஷ்பம் அக்ஷதைகளை ஸமர்ப்பிக்கவும்.

பிறகு உபசார பூஜை

ஸ்ரீ மஹாகணபதயே நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: பாத்யம் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: ஔபசாரிக ஸ்நானம் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: ஸ்நானானந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: அலங்கரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: யஜ்ஞோபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி
ஸ்ரீ மஹாகணபதயே நம: கந்தான் (சந்தனம்) ஸமர்ப்பயாமி (சந்தனம் இடவும்)
ஸ்ரீ மஹாகணபதயே நம: கந்தஸ்ய உபரி ஹரித்ராகுங்குமம் ஸமர்ப்பயாமி (குங்குமம் இடவும்)
ஸ்ரீ மஹாகணபதயே நம: புஷ்பை: பூஜாயாமி

(புஷ்பம் அக்ஷதைகளையெடுத்து அர்ச்சிக்கவும்)

ஓம் ஸுமுகாய நம:
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணகாய நம:
ஓம் லம்பபோதராய நம:
ஓம் விகடாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் கணாதிபாய நம:
ஓம் தூமகேதவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் ஃபாலசந்த்ராய நம:
ஓம் கஜாநநாய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்பகர்ணாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம:
ஓம் ஸ்ரீமஹாகணபதயே நம:

நாநாவித பத்ர பரிமள புஷ்பாணி ஸமர்ப்பயாமி

(பிறகு வெற்றிலை, பாக்கு, பழம் இவைகளை நிவேதனம் செய்ய வேண்டும்)

ஸ்ரீ மஹாகணபதயே நம: கதளீஃபலம் நிவேதயாமி (வாழைப்பழம் நிவேதனம் செய்யவும்). பாநீயம் ஸமர்ப்பயாமி (உத்தரணியால் தீர்த்தம் எடுத்து கிண்ணத்தில் விடவும்)

வெற்றிலை, பாக்கு மீது ஒரு உத்தரணி தீர்த்தத்தை விடவும். தாம்பூலம் ஸமர்ப்பயாமி (என்று சொல்லி அக்ஷதை போடவும்.)

ஸ்ரீ மஹாகணபதயே நம: கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி (என்று கற்பூரம் காட்டவும்)

ப்ரார்த்தனை

வக்ரதுண்ட மஹாகாய கோடிஸூர்ய ஸமப்ரப |
அவிக்நம் குரு மே தேவ ஸர்வகார்யேஷு ஸர்வதா ||

(ப்ரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்யவும்)

" ஸ்ரீ மஹா கணபதி ப்ரஸாதம் சி'ரஸா க்ருஹ்ணாமி" (என்று புஷ்பம் கொஞ்சம் எடுத்து தலையில் வைத்துக் கொண்டு அக்ஷதையை சி'ரஸில் (தலையில்) போட்டுக் கொள்ளவும்.

பிறகு ஸ்ரீ வைபவ லக்ஷ்மீக்கு (கலசத்தில்) பூஜையைச் செய்யவும்

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜை

சு'க்லாம் பரதரம் விஷ்ணும் ச'சி'வர்ணம் சதுர்புஜம் |
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சா'ந்தயே ||

ப்ராணாயாமம்

ம் பூ: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓகும் ஸத்யம், ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத், ஓமாப: ஜ்யோதீரஸ: அம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்ஸுவரோம்.

ஸங்கல்பம்

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா, ஸ்ரீ பரமேச்'வர ப்ரீத்யர்த்தம், சு'பே சோ'பநே முஹூர்த்தே, ஆத்ய ப்ரஹ்மண த்விதீய பரார்த்தே, ச்'வேதவராஹ கல்பே, வைவஸ்வத மந்வந்தரே, அஷ்டாவிகும் சதிதமே கலியுகே, ப்ரதமேபாதே, ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரதக்கண்டே, மேரோ: தக்ஷிணே பார்ச்'வே, ச'காப்தே, அஸ்மிந் வர்த்தமாநே வ்யாவஹாரிகே, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணாம்மத்யே .... நாம ஸம்வத்ஸரே...அயனே...ருதௌ... மாஸே...பக்ஷே...யாம்(திதி)... சுபதிதௌ..ப்ருகுவாஸர யுக்தாயாம்...நக்ஷத்ர யுக்தாயாம், சு'பயோக சுபகரண ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் (திதி) சுபதிதௌ, (அவரவர்களுக்கு உரிய ப்ரார்த்தனைகளை வேண்டிக் கொள்ள வேண்டும்) மம சீ'க்ரமேவ விவாஹ ப்ராப்த்யர்த்தம், மம தீர்க்க

ஸௌமாங்கல்ய அவாப்த்யர்த்தம், மம பர்த்துச்ச அந்யோந்ய ப்ரீதி புரஸ்ஸரம் அவியோகார்த்தம். ஸத்புத்ர ஸகல ஸௌபாக்ய ஸித்யர்த்தம். லக்ஷ்மீ கடாக்ஷ அனுக்ரஹ ஸித்தியர்த்தம் இஷ்டகாம்யார்த்த ஸித்யர்த்தம் ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ ப்ரீத்யர்த்தம், ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ ப்ராஸத ஸித்யர்த்தம் ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ ப்ரஸாதாத் ஸகல சிந்தித மனோரதாவாப்த்யர்த்தம் ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜாம் கரிஷ்யே (என்று கூறி உத்தரணியால் சிறிது தீர்த்தத்தை எடுத்து கையை துடைத்துக் கொண்டு.)

பிறகு **"விக்நேச்'வராய நம: யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி"**

(என்று சொல்லி அக்ஷதை புஷ்பம் சேர்த்து மஞ்சள் பிள்ளையர்ரை வடக்கே நகர்த்தவும்).

கலச பூஜை

பஞ்சபாத்திரத்தில் தீர்த்தம் நிரப்பி பாத்திரத்திற்கு சந்தனம் குங்குமமிட்டு ஒரு துளசியை தீர்த்தத்தில் போட்டு அதை கையால் மூடிக் கொண்டு,

கலச'ஸ்ய முகே விஷ்ணு: கண்டே ருத்ரஸ்ஸமாச்ரித:
மூலே தத்ர ஸ்திதோ ப்ரஹ்மா மத்யே மாத்ருகணா:ஸ்ம்ருதா ||

குக்ஷௌ து ஸாகராஸ் ஸர்வே ஸப்த த்வீபா வஸுந்தரா: |
ருக்வேதோ(அ)த யஜுர்வேத: ஸாமவேதோ(அ) ப்யதர்வண:||

அங்கைச்'ச ஸஹிதா: ஸர்வே கலசாம்பு ஸமாச்'ரிதா: |
ஆயாந்து தேவி பூஜார்த்தம் துரிதக்ஷய காரகா: ||

கங்கே ச யமுநே சைவ கோதாவரீ ஸரஸ்வதீ |
நர்மதே ஸிந்து காவேரீ ஜலே(அ) ஸ்மிந் ஸந்நிதிம் குரு ||

(என்று கூறி துளஸியால் தன்னையும் பூஜா திரவியங்களையும் ப்ரோக்ஷித்துக் கொண்டு).

கண்டா பூஜை

ஆகமார்த்தம் து தேவானாம் கமநார்த்தம் து ரக்ஷஸாம் |
கண்டாரவம் கரோம்யத்ய தேவதாஹ்வாந லாஞ்சநம் ||

(என்று கூறி மணியை அடிக்கவும். பிறகு கையில் புஷ்பம், அக்ஷதை கொஞ்சம் எடுத்துக்கொண்டு)

த்யானம்

யா ரக்தாம்புஜ வாஸினீ விலாஸினீ சண்டாம்சு' தேஜஸ்வினீ
யா ரக்தா ருதிராம்பரா ஹரிஸகீ யா. ஸ்ரீ மனோஹ்லாதினீ
யா ரத்னாகர மந்தனாத் ப்ராகன்டிதா விஷ்ணோஸ்வயா கேஹினீ |
ஸா மாம் பாது மனோரமா பகவதீ லக்ஷ்மீச்'ச பத்மாவதீ ||

ஸரஸிஜ நயனே ஸரோஜ ஹஸ்தே
தவளதராம்சு'க கந்த மால்ய சோ'பே |
பகவதி ஹரிவல்லபே மனோஜ்ஞே
த்ரிபுவன பூதிகரி ப்ரஸீத மஹ்யம் ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: த்யாயாமி (என்று கூறி புஷ்பாக்ஷதைகளை கும்பத்தில் யந்திரத்தில் ஸமர்ப்பிக்கவும்)

ஸர்வ ஸம்பத் ப்ரதாத்ரீம் ச மஹாலக்ஷ்மீம் அஹம் பஜே |
ஆவாஹயாம்யஹம் லக்ஷ்மீம் ஸர்வ ஸௌக்ய ப்ரதாயிநீம் ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: ஆவாஹயாமி (என்று கூறி புஷ்பாக்ஷதைகளை கும்பத்தில் யந்திரத்தில் ஸமர்ப்பிக்கவும்).

கங்காதி ஸர்வ தீர்த்தேப்யோ மயா ப்ரார்த்தநயாஹ்ருதம் |
தோயம் ஏதத் ஸுகஸ்பர்சம் பாத்யார்த்தம் ப்ரதிக்ருஹ்யதாம்||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: பாத்யம் ஸமர்ப்பயாமி (உத்தரணியில் தீர்த்தம் எடுத்து கிண்ணத்தில் ஸமர்ப்பிக்கவும்)

அஷ்டகந்த ஸமாயுக்தம் ஸ்வர்ண பாத்ர ப்ரபூஜிதம் |
அர்க்யம் க்ருஹாண மத் தத்தம் மஹாலக்ஷ்மியை
நமோ(அ)ஸ்து தே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி (உத்தரணியில் தீர்த்தத்தை எடுத்து மூன்று தடவை கிண்ணத்தில் விடவும்.)

கற்பூரேண ஸுகந்தேந ஸுரபி ஸ்வாது சீ'தளம் |
தோயம் ஆசமநீயார்த்தம் தேவி த்வம் ப்ரதிக்ருஹ்யதாம் ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (உத்தரணியில் தீர்த்தம் எடுத்து மூன்று முறை கிண்ணத்தில் விடவும்.)

மதுபர்க்கம் மயா தேவி காஞ்சீ நூபுர சோபிதே |
ஸ்வீக்ருத்ய தயயா தேவி குருமஹம் து மங்களம் ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: மதுபர்க்கம் ஸமர்ப்பயாமி (மூன்று சொட்டு தேன், கிண்ணத்தில் ஸமர்ப்பிக்கவும்)

பஞ்சாம்ருதம் இதம் திவ்யம் பஞ்சபாதக நாசநம் |
பஞ்ச பூதாத்மகே தேவி பாஹி ஸ்வீக்ருத்ய சங்கரீ ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: பஞ்சாம்ருத ஸ்நாநம் ஸமர்ப்பயாமி (பஞ்சாம்ருதத்தை அபிஷேகம் செய்வதுபோல் பாவித்து சிறிதளவு கிண்ணத்தில் ஸமர்ப்பிக்கவும்)

ஸ்நாஸ்யதாம் பாபநாசா'ய யா ப்ரவ்ருத்த ஸுராபஹா |
மயார்பிதாத்வம் க்ருஹ்ணீஷ்வ ப்ரீதா பவ தயாநிதே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: சு'த்தோதகஸ்நானம் ஸமர்ப்பயாமி (தீர்த்தத்தை உத்தரணியில் எடுத்து கிண்ணத்தில் விடவும்).

ஸர்வ பூஷாதிகே ஸௌம்யே லோக லஜ்ஜா நிவாரணே |
வாஸஸி ப்ரதி க்ருஹ்யேதாம் மயா துப்யம் ஸமர்ப்பிதே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: வஸ்த்ரார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (கும்பம் அல்லது யந்திரத்தில் அக்ஷதையை ஸமர்ப்பிக்கவும்)

உபவீதம் மயா ப்ரீத்யா காஞ்சநேந விநிர்மிதம் |
க்ருஹீத்வா த்வயி பக்திம் மே ப்ரயச்ச கருணாநிதே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: யஜ்ஞோபவீதார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி (கும்பம் அல்லது யந்திரத்தில் அக்ஷதையை ஸமர்ப்பிக்கவும்).

ஸ்ரீ கண்ட சந்தனம் திவ்யம் கந்தாட்யம் ஸுமனோஹரம் |
விலேபநம் ஸுரச்ரேஷ்ட்டே ப்ரீத்யர்த்தம் ப்ரதி க்ருஹ்யதாம்||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: கந்தான் தாரயாமி கந்தஸ்ய உபரி ஹரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி (கும்பத்திற்கு சந்தனம் குங்குமம் ஸமர்ப்பிக்கவும்)

மாங்கல்ய மணி ஸம்யுக்தம் முக்தா வித்ரும ஸம்யுதம் |
தத்தம் மங்கள ஸூத்ரஞ்ச க்ருஹாண ஹரி வல்லபே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: மங்கள ஸூத்ரம் ஸமர்ப்பயாமி (மங்கள ஸூத்ரம் ஸமர்ப்பிக்கவும்)

ரத்ந கங்கண வைடுர்ய முக்தா ஹாராதிகாநி ச |
ஸுப்ரஸந்நேந மநஸா தத்தாநி த்வம் க்ருஹாண மே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: ஆபரணானி ஸமர்ப்பயாமி (வெள்ளி, பவுன் முதலிய ஆபரணங்களை ஸமர்ப்பிக்கவும்) (யதாசக்தி)

ஜாதீ சம்பக புந்நாக கேதகீ வகுளாநி ச |
மயார்ப்பிதாநி ஸுபகே க்ருஹாண ஜகதம்பிகே ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை நம: புஷ்பாணி ஸமர்ப்பயாமி

அங்க பூஜை (புஷ்பங்களால் அர்ச்சிக்கவும்)

ஓம்	ஸபலாயை	நம:	பாதௌ (பாதம்) பூஜயாமி
ஓம்	ஸஞ்சலாயை	நம:	ஜாநூ (முழங்கால்) பூஜயாமி
ஓம்	கமலாயை	நம:	கடிம் (இடுப்பு) பூஜயாமி
ஓம்	காத்யாயிந்யை	நம:	நாபிம் (நாபி) பூஜயாமி
ஓம்	ஜகன் மாத்ரே	நம:	ஜடரம் (வயிறு) பூஜயாமி
ஓம்	விஷ்ணு வல்லபாயை	நம:	வக்ஷ: (மார்பு) பூஜயாமி
ஓம்	கமல வாஸிந்யை	நம:	புஜத்வயம்(புஜங்கள் தோள்) பூஜயாமி
ஓம்	பத்ம நிலயாயை	நம:	முகம் (முகம்) பூஜயாமி
ஓம்	கமலபத்ராக்ஷ்யை	நம:	நேத்ரத்வயம் (கண்கள்) பூஜயாமி
ஓம்	ச்'ரியை	நம:	சிர(சி'ரஸ்) பூஜயாமி
ஓம்	ஸ்ரீ வைபவ லக்ஷ்ம்யை	நம:	ஸர்வாணி அங்கானி பூஜயாமி

ஸ்ரீ லக்ஷ்மீ அஷ்டோத்தர சத நாமாவளி:

(குங்குமத்தால் அர்ச்சிக்கவும்)

ஓம் ப்ரக்ருத்யை நம:
ஓம் விக்ருத்யை நம:
ஓம் வித்யாயை நம:
ஓம் ஸர்வபூதஹித ப்ரதாயை நம:
ஓம் ச்'ரத்தாயை நம:
ஓம் விபூத்யை நம:
ஓம் ஸுரப்யை நம:
ஓம் பரமாத்மிகாயை நம:
ஓம் வாசே நம:
ஓம் பத்மாலயாயை நம: 10
ஓம் பத்மாயை நம:
ஓம் சு'சயே நம:
ஓம் ஸ்வாஹாயை நம:
ஓம் ஸ்வதாயை நம:
ஓம் ஸுதாயை நம:
ஓம் தன்யாயை நம:
ஓம் ஹிரண்மய்யை நம:
ஓம் லக்ஷ்ம்யை நம:
ஓம் நித்யபுஷ்டாயை நம:
ஓம் விபாவர்யை நம: 20
ஓம் அதித்யை நம:
ஓம் தித்யை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் வஸுதாயை நம:
ஓம் வஸுதாரிண்யை நம:
ஓம் கமலாயை நம:
ஓம் காந்தாயை நம:

ஓம் காமாக்ஷ்யை நம:
ஓம் க்ஷீரோத ஸம்பவாயை நம:
ஓம் அநுக்ரஹப்ரதாயை நம: 30
ஓம் புத்யை நம:
ஓம் அநகாயை நம:
ஓம் ஹரிவல்லபாயை நம:
ஓம் அசோகாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் தீப்தாயை நம:
ஓம் லோகசோக விநாசிந்யை நம:
ஓம் தர்ம நிலயாயை நம:
ஓம் கருணாயை நம:
ஓம் லோகமாத்ரே நம: 40
ஓம் பத்ம ப்ரியாயை நம:
ஓம் பத்ம ஹஸ்தாயை நம:
ஓம் பத்மாக்ஷ்யை நம:
ஓம் பத்மஸுந்தர்யை நம:
ஓம் பத்மோத்பவாயை நம:
ஓம் பத்மமுக்யை நம:
ஓம் பத்மநாபப்ரியாயை நம:
ஓம் ரமாயை நம:
ஓம் பத்மமாலாதராயை நம:
ஓம் தேவ்யை நம: 50
ஓம் பத்மிந்யை நம:
ஓம் பத்மகந்தின்யை நம:
ஓம் புண்யகந்தாயை நம:
ஓம் ஸுப்ரஸன்னாயை நம:
ஓம் ப்ரஸாதாபிமுக்யை நம:
ஓம் ப்ரபாயை நம:
ஓம் சந்த்ர வதனாயை நம:

ஓம்	சந்த்ராயை	நம:	
ஓம்	சந்த்ரஸஹோதர்யை	நம:	
ஓம்	சதுர்புஜாயை	நம:	60
ஓம்	சந்த்ரரூபாயை	நம:	
ஓம்	இந்திராயை	நம:	
ஓம்	இந்துசீ'தளாயை	நம:	
ஓம்	ஆஹ்லாதஜநந்யை	நம:	
ஓம்	புஷ்ட்யை	நம:	
ஓம்	சி'வாயை	நம:	
ஓம்	சி'வகர்யை	நம:	
ஓம்	ஸத்யை	நம:	
ஓம்	விமலாயை	நம:	
ஓம்	விச்'வஜநந்யை	நம:	70
ஓம்	துஷ்ட்யை	நம:	
ஓம்	தாரித்ர்யநாசி'ந்யை	நம:	
ஓம்	ப்ரீதி புஷ்கரிண்யை	நம:	
ஓம்	சாந்தாயை	நம:	
ஓம்	சு'க்ல மால்யாம் பராயை	நம:	
ஓம்	ச்'ரியை	நம:	
ஓம்	பாஸ்கர்யை	நம:	
ஓம்	பில்வ நிலயாயை	நம:	
ஓம்	வராரோஹாயை	நம:	
ஓம்	யச'ஸ்விந்யை	நம:	80
ஓம்	வஸுந்தராயை	நம:	
ஓம்	உதாராங்காயை	நம:	
ஓம்	ஹரிண்யை	நம:	
ஓம்	ஹேமமாலின்யை	நம:	
ஓம்	தனதான்யகர்யை	நம:	
ஓம்	ஸித்தயே	நம:	
ஓம்	ஸ்த்ரைண ஸௌம்யாயை	நம:	

ஓம் சு'பப்ரதாயை நம:
ஓம் ந்ருபவேச்'ம கதாநந்தாயை நம:
ஓம் வரலக்ஷ்ம்யை நம: 90
ஓம் வஸுப்ரதாயை நம:
ஓம் சு'பாயை நம:
ஓம் ஹிரண்ய ப்ராகாராயை நம:
ஓம் ஸமுத்ர தநயாயை நம:
ஓம் ஜயாயை நம:
ஓம் மங்களாதேவ்யை நம:
ஓம் விஷ்ணுவக்ஷஸ்த்தலஸ்த்திதாயை நம:
ஓம் விஷ்ணுபத்ந்யை நம:
ஓம் ப்ரஸன்னாக்ஷ்யை நம: 100
ஓம் நாராயண ஸமாச்'ரிதாயை நம:
ஓம் தாரித்ரிய த்வம்ஸின்யை நம:
ஓம் தேவ்யை நம:
ஓம் ஸர்வோபத்ரவ வாரிண்யை நம:
ஓம் நவதுர்காயை நம:
ஓம் மஹாகாள்யை நம:
ஓம் ப்ரஹ்மவிஷ்ணு சி'வாத்மிகாயை நம:
ஓம் த்ரிகால ஜ்ஞாந ஸம்பந்நாயை நம:
ஓம் ஸ்ரீ புவனேச்'வர்யை நம: 108

அஷ்டோத்தர சத நாம குங்குமார்ச்சனான் ஸமர்ப்பயாமி



ஸகல ஸௌபாக்யங்களும் தரும் பூஜைக்குரிய

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ மஹா யந்த்ரம்



ஸகல ஸௌபாக்யங்களும் தரும்

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜைக்குரிய

ஸ்ரீ யந்த்ரம்



பூஜை செய்யும் முன் ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை தியானித்து இந்த ஸ்ரீ யந்திரத்திற்கு நமஸ்காரம் செய்து ஆரம்பிக்கவும்

ஸகல ஸௌபாக்யங்களும் தரும்


ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ



"யாம் இருக்கும் இடத்தில் செல்வம் செழிக்கும்"

பூஜைக்குரிய படம்

ஸ்ரீ வைபவ லக்ஷ்மி கோலம்



இந்தக் கோலத்தினை ஸ்ரீ வைபவ லக்ஷ்மி படத்திற்கு முன் மாவினால் கோலம் போட்டு மத்தியில் குங்குமம் வைத்து சுற்றி மஞ்சளால் கோலம் வரைந்தால் நல்ல பலன் உண்டாகும்.

ஸ்ரீ வைபவ லக்ஷ்மி விசே’ஷ அர்ச்சனை

குங்கும் அல்லது மஹாலக்ஷ்மி (வெள்ளி, செம்பு) காசுகளினால் அர்ச்சனை செய்யவும்.)

ஸ்ரீ பார்வதீ ஸரஸ்வதீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
விஷ்ணுப்ரியே மஹாமாயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
கமலே விமலே தேவி மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
காருண்ய நிலயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
தாரித்ரிய துக்க ச்மனீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸ்ரீ தேவீ நித்ய கல்யாணீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸமுத்ர தனயே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ராஜ லக்ஷ்மீ ராஜ்ய லக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வீரலக்ஷ்மீ விச்வ லக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மூக ஹந்த்ரீ மந்த்ரரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மஹிஷாஸுர ஸம்ஹர்த்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மதுகைடப நித்ராவே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ச்ங்கசக்ர கதா ஹஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வைகுண்ட ஹ்ருதயாவாஸே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
பக்ஷீந்த்ர வாஹனே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
தான்யரூபே தான்யலக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸ்வர்ணரூபே ஸ்வர்ண லக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வித்தரூபே வித்தலக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஹரிப்ரியே வேதரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஃபலரூபே ஃபல தாத்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
நிஸ்துலே நிர்மலே நித்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ரத்னரூபே ரத்னலக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
க்ஷீரரூபே க்ஷீரதாத்ரி மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வேதரூபே நாதரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ப்ராணரூபே ப்ராணமூர்த்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ப்ரணவானந்த மஹஸே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ப்ரஹ்மரூபே ப்ரஹ்ம தாத்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஜாதவேத ரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஆதார சுல்க நிலயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸுஷும்னா ஸுஷிராந்தஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

யோகாநந்த ப்ரதாயின்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸௌந்தர்ய ரூபிணீ தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸித்தலக்ஷ்மீ ஸித்தரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸர்வ ஸந்தோஷ ஸத்ரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
துஷ்டிதே புஷ்டிதே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 35
ராஜ ராஜார்ச்சித பதே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸாரஸ்வரூபே திவ்யாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
சாரித்ர்ய திவ்ய சுத்தாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வேதகுஹ்யே சுபே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
தர்மார்த்த காமரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 40
மோக்ஷ ஸாம்ராஜ்ய நிலயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸர்வ கம்யே ஸர்வரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மோஹினி மோஹரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
பஞ்சபூதாந்தராளஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
நாராயண ப்ரியதமே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 45
காரணீ கார்யரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
அனந்த தல்ப சயனே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
லோகைக ஜனனீ வந்த்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
சம்புரூபே சம்புமுத்ரே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ப்ரஹ்மரூபே ப்ரஹ்மமுத்ரே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 50
விஷ்ணுரூபே விஷ்ணுமாயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஆஜ்ஞா சக்ராப்ஜ நிலயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஹகாரரேஃப சக்த்யாபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஹ்ருதயாம்புஜ தீபாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
விஷ்ணுக்ரந்தி விசாலாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 55
ஆதாரமூல நிலயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ப்ரஹ்மக்ரந்தி ப்ரகாசாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
குண்டலீ சயநானந்தீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஜீவாத்ம ரூபிணீ மாதா மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸ்தூல ஸூக்ஷ்ம ப்ரகாசஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 60
ப்ரஹ்மாண்ட பாண்ட ஜனனீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
அச்வத்த வ்ருக்ஷ ஸந்துஷ்டே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

காருண்ய பூர்ணே ஸ்ரீதேவி மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மூர்த்தி த்ரய ஸ்வரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
பானு மண்டல மத்யஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 65
ஸூர்ய ப்ரகாச ரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
சந்த்ர மண்டல மத்யஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வஹ்னி மண்டல மத்யஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
பீதாம்பரதரே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
திவ்யாபரண சோ்பாட்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 70
ப்ராஹ்மணாராதிதே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
நாரஸிஹ்மீ க்ருபாஸிந்தோ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வரதே மங்களே மான்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
பத்மாடவீ நிலயனே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
வ்யாஸாதி திவ்யஜ்ஞ ஸம்பூஜ்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 75
ஜயலக்ஷ்மீ ஸித்தலக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ராஜமுத்ரே விஷ்ணுமுத்ரே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸர்வார்த்த ஸாதகீ நித்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஹனுமத் பக்தி ஸந்துஷ்டே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மஹதீ கீத நாதஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 80
ரதிரூபே ரம்யரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
காமாங்கீ காமஜனனீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ஸுதாபூர்ணே ஸுதாரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
இந்த்ர வந்த்யே தேவலக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
அஷ்டைச்வர்ய ஸ்வரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 85
தர்மராஜ ஸ்வரூபிண்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ரக்ஷாவரபுரீ லக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ரத்னாகர ப்ரபாரம்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
மருத்புர மஹானந்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
குபேர லக்ஷ்மீ மாதங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 90
ஈசான லக்ஷ்மீ ஸர்வேசீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே
ப்ரஹ்மபீடே மஹாபீடே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

மாயா பீடஸ்திதே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ஶ்ரீ சக்ர வாஸிநீ கன்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

அஷ்டபைரவ ஸம்பூஜ்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 95

அஸிதாங்க பூரீ நாதே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ஸித்தலக்ஷ்மீ மஹாவித்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

புத்தீந்த்ரியாதி நிலயே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ரோக தாரித்ர்ய ச்மனீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ம்ருத்யு ஸந்தாப நாசி்ன்யை மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 100

பதிப்ரியே பதிவ்ரதே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

சதுர்புஜே கோமளாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

பக்ஷ்யரூபே புக்தி தாத்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ஸதானந்தமயே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

பக்திப்ரியே பக்திகம்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 105

ஸ்தோத்ரப்ரியே ரமேராமே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ராமநாம ப்ரியே தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

கங்கா ப்ரியே சு்த்த ரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

விச்வ பர்த்ரீ விச்வமூர்த்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

க்ருஷ்ண ப்ரியே க்ருஷ்ண ரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 110

கீதரூபே ராகமூர்த்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ஸாவித்ரீ பூத ஸாவித்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

காயத்ரீ ப்ரஹ்ம காயத்ரீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ப்ரஹ்மீ ஸரஸ்வதீ தேவீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

சு்கலாபினீ சு்த்தாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 115

வீணாதர ஸ்தோத்ர கம்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ஆஜ்ஞாகரீ ப்ராஜ்ஞவந்த்யே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

வேதாங்கவன ஸாராங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

நாதாந்த ரஸபூயிஷ்டே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

திவ்யசக்தி மஹாசக்தி மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 120

ந்ருத்தப்ரியே ந்ருத்த லக்ஷ்மீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

சது:ஷஷ்டி கலாரூபே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

ஸர்வ மங்கள ஸம்பூர்ணே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

திவ்ய கந்தாங்க ராகாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

முக்திதே முக்தி தேஹஸ்தே மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே

யஜ்ஞஸாரார்த்த சு்த்தாங்கீ மஹாலக்ஷ்மீ நமோஸ்துதே 126

உத்தராங்க பூஜை

வனஸ்பதி ரஸோத்பந்தோ கந்தாட்யோ கந்த உத்தமம் |
ஆக்ரேயஸ் ஸர்வ தேவானாம் தூபோயம் ப்ரதி க்ருஹ்யதாம் ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை நம: தூபம் ஆக்ராபயாமி (ஊதுபத்தி அல்லது சாம்பிராணி காட்டவும்.)

கற்பூர வர்த்தி ஸம்யுக்தம் க்ருதயுக்தம் மனோஹரம் |
தமோ நாசகரம் தீபம் க்ருஹாண பரமேச்வரி ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை நம:
தீபம் தர்சயாமி (தீபத்தை காட்டவும்.)

பிறகு நைவேத்யம்

சர்க்கரைப் பொங்கல், தேங்காய், வாழைப்பழம், தாம்பூலம் முதலிய நைவேத்ய பதார்த்தங்களை ஒரு உத்தரணி தீர்த்தத்தால் ப்ரோக்ஷித்து,

பஹுபக்ஷ்ய ஸமாயுக்தம் நானா:ப்பல ஸமந்விதம் |
நைவேத்யம் க்ருஹ்யதாம் தேவி நாராயண குடும்பிநீ ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை நம: குடான்னம் நாளிகேர கண்டம். கதலீஃபலம், தாம்பூலம் நைவேத்யம் ஸமர்ப்பயாமி. நிவேதனானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி (என்று தீர்த்தத்தை மூன்று முறை கிண்ணத்தில் விடவும்.)

நீராஜநம் நீரஜாக்ஷீ நாராயண விலாஸிநீ |
க்ருஹ்யதாமர்ப்பிதம் பக்த்யா கருடத்வஜ பாமிநீ ||

ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை நம: கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி

யானி கானிச பாபானி ஜன்மாந்தர க்ருதானி ச |
தானி தானி விநச்யந்தி ப்ரதக்ஷிண பதே பதே ||

என்று கூறி ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்யவும். பிறகு ஸ்ரீ வைபவ லக்ஷ்மி கதையைப் படிக்கவும். பிறகு ஆரத்தி எடுக்கவும்.

மேற்கண்டவாறு ஆரத்தி எடுத்தபின் "அஸ்மாத் கும்பாத் ஸ்ரீ வைபவ லக்ஷ்மீம் உத்யாபயாமி " என்று சொல்லி அக்ஷதை புஷ்பம் ஸமர்ப்பித்து கலசத்தை சிறிது வடக்கு பக்கம் நகர்த்தி வைக்கவும்.

கல்ச தீர்த்தத்தை தான் சிறிதளவு உட்கொண்டு ப்ரோக்ஷித்துக்கொண்டு வீடு முழுவதும் ப்ரோக்ஷித்து வந்தவர்களுக்கும் தீர்த்தமாகக் கொடுத்து மீதியை துளசிச் செடியிலோ கிணற்றிலோ ஊற்றவும்.

ஸ்ரீ வைபவ லக்ஷ்மி பூஜை ஸம்பூர்ணம்.

ஸ்ரீ அஷ்டலக்ஷ்மீ ஸ்தோத்ரம்

1. ஆதிலக்ஷ்மி

ஸுமனஸ வந்தித ஸுந்தரி மாதவி
சந்த்ர ஸஹோதரி ஹேமமயே
முநிகண மண்டித மோக்ஷ ப்ரதாயினி
மஞ்ஜுள பாஷிணி வேதநுதே |
பங்கஜ வாஸினி தேவஸுபூஜித
ஸத்குண வர்ஷிணி சா'ந்தியுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
ஆதிலக்ஷ்மி ஸதா பாலய மாம் ||

2. தான்யலக்ஷ்மி

அயிகலி கல்மஷ நாசி'னி காமிநி
வைதிக ரூபிண்ணி வேதமயே
க்ஷீரஸமுத்பவ மங்கள ரூபிணி
மந்த்ர நிவாஸிநி மந்த்ரநுதே |

மங்கள தாயினி அம்புஜ வாஸிநி
தேவ கணாச்'ரித பாதயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
தான்யலக்ஷ்மி ஸதா பாலய மாம் ||

3. தைர்யலக்ஷ்மி

ஜய வர வர்ணிநி வைஷ்ணவி பார்கவி
மந்த்ர ஸ்வரூபிணி மந்த்ரமயே
ஸுரகண பூஜித சீ'க்ர ஃபலப்ரத
ஜ்ஞான விகாஸிநி சா'ஸ்த்ரநுதே |
பவபய ஹாரிணி பாப விமோசநி
ஸாது ஜநாச்'ரித பாதயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
தைர்யலக்ஷ்மி ஸதா பாலய மாம் ||

4. கஜலக்ஷ்மி

ஜய ஜய துர்கதிநாசி'னி காமிநி
ஸர்வ ஃபலப்ரத சா'ஸ்த்ரமயே
ரத கஜதுரக பதாதி ஸமாவ்ருத
பரிஜன மண்டித லோகனுதே |
ஹரி ஹர ப்ரஹ்ம ஸுபூஜித ஸேவித
தாப நிவாரணி பாதயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
கஜலக்ஷ்மி ரூபேண பாலய மாம் ||

5. ஸந்தான லக்ஷ்மி

அயி கக வாஹிநி மோஹிநி சக்ரிணி
ராக விவர்த்தினி ஞானமயே
குண கண வாரிதி லோக ஹிதைஷிணி
ஸ்வரஸப்த பூஷித கானனுதே ।
ஸகல ஸுராஸுர தேவ முநீச்வர
மாநவ வந்தித பாதயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
ஸந்தானலக்ஷ்மி ஸதா பாலய மாம் ॥

6. விஜயலக்ஷ்மி

ஜய கமலாஸநி ஸத்கதி தாயிநி
ஜ்ஞான விகாஸினி கானமயே
அனுதினமர்ச்சித குங்குமதூஸர
பூஷித வாஸித வாத்யனுதே ।
கனகதரா ஸ்துதிவைபவ வந்தித
சங்கர தேசிக மான்யபதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
விஜயலக்ஷ்மி ஸதா பாலய மாம் ॥

7. வித்யாலக்ஷ்மி

ப்ரணத ஸுரேச்வரி பாரதி பார்கவி
சோகவிநாசிநி ரத்னமயே
மணிமய பூஷித கர்ணவிபூஷண
சாந்தி ஸமாவ்ருத ஹாஸ்யமுகே ।
நவநிதி தாயிநி கலிமல ஹாரிணி
காமித ஃபலப்ரத ஹஸ்தயுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
வித்யாலக்ஷ்மி ஸதா பாலய மாம் ॥

8. தனலக்ஷ்மி

திமி திமி திந்திமி திந்திமி திந்திமி
துந்துபி நாத ஸுபூர்ணமயே
கும கும கும்கும கும்கும கும்கும
ச'ங்க நிநாத ஸுவாத்யநுதே ।
வேத புராணேதிஹாஸ ஸுபூஜித
வைதிக மார்க ப்ரதர்ச'யுதே
ஜய ஜய ஹே மதுஸூதந காமிநி
தனலக்ஷ்மி ரூபேண பாலயமாம் ॥

அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

ஸ்ரீ மஹாலக்ஷ்மியஷ்டகம்

இந்த்ர உவாச

நமஸ்தே(அ)ஸ்து மஹாமாயே ஸ்ரீ பீடே ஸுரபூஜிதே ।
ச'ங்க சக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥1

நமஸ்தே கருடாரூடே கோலாஸுர பயங்கரி ।
ஸர்வ பாப ஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥2

ஸர்வஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி ।
ஸர்வ துக்கஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥3

ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்தி முக்தி ப்ரதாயிநி ।
மந்த்ர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥4

ஆத்யந்த ரஹிதே தேவி ஆதிய ச'க்தி மஹேச்'வரி ।
யோகஜ்ஞே யோக ஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே॥ 5

ஸ்தூல ஸூக்ஷ்ம மஹா ரௌத்ரே மஹாச'க்தி மஹோதரே ।
மஹா பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥ 6

பத்மாஸன ஸ்த்திதே தேவி பரப்ரஹ்ம ஸ்வரூபிணி ।
பரமேசி' ஜகந்மாத: மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥ 7
ச்'வேதாம்பரதரே தேவி நானாலங்கார பூஷிதே ।
ஜகத்ஸ்த்திதே ஜகந்மாத: மஹாலக்ஷ்மி நமோ(அ)ஸ்து தே ॥8
மஹாலக்ஷ்ம்யஷ்டகம் ஸ்தோத்ரம் ய: படேத் பக்திமாந் நர: ।
ஸர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா ॥9
ஏககாலே படேந் நித்யம் மஹாபாப விநாச'னம் ।
த்விகாலம் ய: படேந் நித்யம் தனதான்ய ஸமன்வித: ॥ 10
த்ரிகாலம் ய: படேந் நித்யம் மஹாச'த்ரு வினாச'நம் ।
மஹாலக்ஷ்மீர் பவேந் நித்யம் ப்ரஸன்னா வரதா சு'பா ॥ 11

ஸ்ரீ மஹாலக்ஷ்மியஷ்டகம் ஸம்பூர்ணம்

வைபவ லக்ஷ்மி மஹிமா
ஸ்ரீ மஹாலக்ஷ்மி துதி

மஹா தேவி மஹாலக்ஷ்மீ நமஸ்தே த்வம் விஷ்ணு ப்ரியே ।
ச'க்தி தாயீ மஹாலக்ஷ்மீ நமஸ்தே துக்க பஞ்ஜனீ ॥
ச்'ரியம் ப்ராப்தி நிமித்தாய மஹாலக்ஷ்மீ நமாம்யஹம் ।
பதிதோத்தாரிணீ தேவி நமாம்யஹம் புன: புன: ॥
வேதாஸ்த்வாம் ஸம்ஸ்துவந்தி ஹி
ச'ஸ்த்ராணிசமுஹுர்முஹு:।
தேவாஸ்த்வாம் ப்ரணமந்தி ஹி
லக்ஷ்மீதேவீ நமோ(அ)ஸ்துதே ॥
நமஸ்தே மஹாலக்ஷ்மீ நமஸ்தே பவ பஞ்ஜனீ ।
புத்திமுக்தி ந லப்யதே மஹாதேவீ த்வயி க்ருபாவினா ॥
ஸுக ஸௌபாக்யம் ந ப்ராப்நோதி புத்ர லக்ஷ்மீ ந வித்யதே।
ந சதத் :பலம்மாப்நோதி மஹா லக்ஷ்மீ நமாம்யஹம் ॥

தேஹி ஸௌபாக்யமாரோக்யம் தேஹி மே பரமம் ஸுகம் ।
நமஸ்தே ஆத்ய ச்க்தி த்வம் நமஸ்தே பீட பஞ்ஜனீ ॥
விதேஹி தேவி கல்யாணம் விதேஹி பரமம் ச்ரியம் ।
வித்யா வந்தம் யச்ஸ்வந்தம் லக்ஷ்மீ வந்தம் ஜனம் சமாம் குரு॥
அசிந்த்யரூப சரிதே ஸர்வசத்ரு வினாசினி।
நமஸ்தேஸ்து மஹாமாயே ஸர்வஸுக ப்ரதாயினி ॥
நமாம்யஹம் மஹாலக்ஷ்மீ நமாம்யஹம் ஸுரேச்வரீ।
நமாம்யஹம் ஜகத்தாத்ரீ நமாம்யஹம் பரமேச்வரீ ॥
யத்ராப்யாகவதானமான சரண பக்ஷாளனம் போஜன ।
ஸத்ஸேவா பித்ரு தேவார்ச்சன விதி: ஸத்யம் கவாம் பாலனம் ॥
தன்யானாமபி ஸக்ரஹோ ந கலஹச்சித்தாத்ரு ரூபா ப்ரியா ।
த்ருஷ்டா ப்ரஹா ஹரி வஸாமி கமலா தஸ்மின் க்ருஹே நிஷ்பலா ॥

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜா மஹிமை –கதை

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரத பூஜையினால் பலவிதமான நன்மைகள் ஏற்பட்டுள்ளன. நன்மையடைந்தவர்கள் விபரம் தெரிவித்துள்ளார்கள்.

பெண்ணிற்குத் திருமணம்

பெண்ணிற்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு பணம் இல்லாமல் வருந்திய தாய் தெருவில் சென்று கொண்டிருந்த சமயம் அருகிலிருந்து சென்ற ஒரு ஸ்கூட்டரிலிருந்து ஒரு புத்தகம் கீழே விழுந்தது. அதை எடுத்து பார்த்தாள். அது ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரத பூஜை புத்தகமாக இருந்தது. மறுநாள் வெள்ளிக்கிழமை அதில் கூறியபடி நம்பிக்கையுடன் பக்தியாக பூஜை செய்து வந்தாள். நான்கு வெள்ளிக்கிழமை முடிந்ததும் மஹாராஷ்ட்ர லாட்டரியில் ரூ 30,000 கிடைத்தது. பெண்ணின் திருமணம் நன்றாக நடந்தது. ஸ்ரீ வைபவ லக்ஷ்மியின் அருளால் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். ஜய ஜய லக்ஷ்மீ எல்லோருக்கும் இன்பம் கிடைக்கட்டும் என்று எழுதியுள்ளாள்.

வியாபாரம் வளமை பெற்றது

சுரேஷ் நன்றாக வியாபாரம் செய்து லாபமடைந்து சந்தோஷமாக குடும்பம் நடத்தி வந்தான். எதிர்பாராத விதமாக லாபம் குறைந்து வியாபாரம் நலிய ஆரம்பித்தது. அவன் மனைவி சரளா மிகவும் மனோ தைரியத்துடன் ஒரு வருடம் சமாளித்து வந்தாள்.

அச்சமயம் சரளாவின் மாமி வீட்டிற்கு வந்தாள். சரளா மாமியிடம் தன் மனக்குறைகளைக் கூறினாள். மாமி, "ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரத பூஜையை செய்தால் உன் துன்பங்கள் தூர விலகும்" என்றாள். சரளா உடன் கடைக்குச் சென்று ஸ்ரீ வைபவ லக்ஷ்மி புத்தகம், அஷ்ட லக்ஷ்மி படம், ஸ்ரீ வைபவ லக்ஷ்மி யந்த்ரம் முதலிய தேவையான பொருட்களை வாங்கி வந்து வெள்ளிக்கிழமை பூஜையைத் தொடங்கினாள். அன்று மாலையே சுரேஷ் கம்பெனியிலிருந்து மிக சந்தோஷமாக வீடு திரும்பினான்.

காரணம்! ஒரு பெரிய வியாபாரத் தொடர்பு ஏற்பட்டு ஒப்பந்தமாகியது. தன் மனைவியிடம் கூறினான். அவளும் மகிழ்ச்சியடைந்து தொடர்ந்து 21 வெள்ளிக்கிழமை பூஜை செய்து பூஜை முடிக்கும் நாளன்று 101 ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ புத்தகங்களை வாங்கி எல்லோருக்கும் கொடுத்து ப்ரஸாதமும் வழங்கினாள். சுரேஷ் சரளா குடும்பத்தில் அதற்கு பிறகு துக்கத்தையும், துன்பத்தையும் தேட வேண்டியதாயிற்று. அன்னையின் அருள் இருக்க மற்ற அரக்கர்கள் அருகே வருவார்களா ?

இப்படி கல்வி, செல்வம், மனநிம்மதி அடைய முடியாமல் வரும் எந்த துக்கத்தையும் போக்கடிப்பதற்கு (அன்னை ஸ்ரீ வைபவ லக்ஷ்மியின் அருளைப் பெற்று) ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரத பூஜையைச் செய்து வளம் பெறலாம்.

ஜய ஜய வைபவ லக்ஷ்மீ.

ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ வ்ரத பூஜா வரலாறு

வட இந்தியாவில் ஒரு பெரிய நகரத்தில் கோடிக் கணக்கான மக்கள் வசித்து வந்தனர். அங்கு நல்லவர் பலர் இருந்தனர். அவர்கள் சத்தியத்தைக் கடைபிடித்து தெய்வ பக்தியுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்களுள் அபூர்வ தம்பதிகள் ஷீலாவும் அவளது கணவரும்.

ஷீலா குடும்பத்தினர் நல்ல குணவான்கள். உழைப்பை உயர்வாகக் கருதி செயல்படுபவர்கள். பக்தியுடையவர்கள். கடவுள் நம்பிக்கை மிகவும் அதிகம். குறிப்பாக மஹாலக்ஷ்மியிடம் மிகுந்த பக்தியுடையவர்கள். வீட்டில் பூஜை, பஜனை முதலியவைகளைச் செய்வதோடு அன்னை மஹாலக்ஷ்மியின் கோவிலில் பூஜை பஜனை முதலியவற்றை செய்தும் கலந்து கொண்டும் இருந்தனர்.

அவர்கள் குடும்பத்தில் செல்வம் குவிந்து கிடந்தது. துன்பத்தையே அறியாது மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்தினர். ஷீலாவின் கணவர் நல்ல முதலாளியாகவும், வியாபாரியாகவும் இருந்தார். இவர்கள் குடும்பத்தை அந்நகரில் உள்ளவர்கள் ஒரு லக்ஷிய குடும்பமாகக் கருதி மிக்க மதிப்பும் மரியாதையுடனும் பழகி வந்தனர்.

அக்குடும்பத்தில் திடீரென்று மாற்றம் காணப்பட்டது. கண் திருஷ்டி பட்டது போல் ஆனது. விதி வேறு விதமாக விளையாடத் தொடங்கியது. ஷீலாவின் கணவர் தன் குணத்திலிருந்து நழுவினார். தீயவர்களுடன் பழக்கம் ஏற்பட்டு மது அருந்துதல், சூது விளையாடுதல், குதிரைப் பந்தயம் விளையாடுதல் ஆகிய தீய செயல்களில் இறங்கினார். இதன் விளைவு? செல்வம் குறைந்தது. மகிழ்ச்சி குறைந்தது. அன்னை மஹாலக்ஷ்மியின் கருணையில்லையோ என்று நினைக்குமளவு தரித்திரம் என்ற அரக்கன் விளையாட வறுமை என்ற இருள் சூழ ஆரம்பித்தன. மகிழ்ச்சி மறைந்தது. ஷீலா மிகவும் துக்க கடலில் மூழ்கினாள்.

மிக்க வருத்தமான இந்த சூழ்நிலையில் ஷீலா தன் கணவரை எப்படி திருத்துவது என்று யோசனை செய்தாள். அவன் திருந்துவதாக இல்லை. இவளுடைய எந்தவித அறிவுரைகளையும் அவன் காதில் போட்டுக் கொள்ளாமல் கிடைத்த பணத்தை விரயம் செய்து கொண்டே இருந்தான்.

ஆனால் ஷீலா மனம் தளராமல் இப்படிப்பட்ட ஏழ்மை நிலை நிச்சயம் மாறுபடும் என்று தன்னம்பிக்கைக் கொண்டிருந்தாள். அன்னை மஹாலக்ஷ்மி கோவிலுக்கு போவதற்கு அவளால் இயலவில்லை. ஏனென்றால் மனதில் உள்ள துக்கத்துடன் அங்கு சென்று பக்தியில்லாமல் பஜனை செய்ய வேண்டி வருமோ என்று அஞ்சினாள்.

எனவே கோவிலுக்குப் போகும் பழக்கம் அறவே நின்று விட்டது. இருப்பினும் வீட்டில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை பூஜை செய்து பஜனையும் செய்து வந்தாள். தன் மனக் குறைகளை யெல்லாம் தேவியிடம் இறக்கி வைத்தாள். என்றாவது ஒருநாள் தாய் நமக்கு கருணை புரியாமல் போக மாட்டாளா? என்று நம்பிக்கைக் கொண்டாள். இதனால் அவள் மனச்சுமை இறங்கி தைரியமாக குடும்பத்தை நடத்த முடிந்தது. இதற்கு காரணம் அவள் மனதில் இருந்த தெய்வ நம்பிக்கை கொஞ்சமும் குறையவில்லை.

ஒரு நாள் வழக்கம் போல் எல்லோரும் வெளியே அவரவர் வேலைக்குச் சென்ற பிறகு வாசல் கதவை தாளிட்டு உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள். தன் ஏழ்மையைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் வாசற்கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. ஷீலா, இந்த ஏழையின் வீட்டுக்கு இந்த நேரத்தில் யார் வரப்போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டே கை வேலையை நிறுத்திவிட்டு வாசற்கதவைத் திறந்தாள்.

அன்பே உருவான வடிவம், கருணையே நிறைந்த பார்வை, அமைதியான முகம், கடாக்ஷம் பொங்கிய பார்வையையுடைய ஒரு ஸ்த்ரீ(மாது) நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஷீலாவுக்கு தன் மனச்சுமை நிஜமாகவே இறங்கியது போல தோன்றிற்று. அந்த அம்மாவை உள்ளே மகிழ்ச்சியுடன் வரவேற்றாள் ஷீலா. உட்கார வைக்க உயர்ந்த ஆஸனம் ஏதும் இல்லை. ஒரு கிழிசல் பாயை போட்டு உட்கார வைத்தாள்.

என்ன ஷீலா என்னை யார் என்று உனக்கு அடையாளம் தெரியவில்லையா? என்றாள் அந்த அம்மா. அவள் ஸாக்ஷாத் ஸ்ரீ வைபவ லக்ஷ்மி தான் தனத்தைக் கொடுக்கும் தனலக்ஷ்மியே ஸ்ரீ வைபவ லக்ஷ்மியாக ஒரு சாதாரண பெண் போல் உருவெடுத்து ஷீலாவிற்கு உபதேசிக்க வந்திருக்கிறாள்.

ஷீலா, அம்மா உங்களை அடையாளம் தெரியவில்லையே. உங்கள் உருவம் நான் இதுவரைப் பார்த்த எந்த உருவத்துடனும் ஒற்றுமை காணாததாக இருக்கிறது. நான் உங்களை எங்கும் இதுவரை பார்த்ததில்லையே என்றாள்.

நீ மறந்து விட்டாயா, ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோவிலுக்கு வருவாய். பூஜையிலும், பஜனையிலும் கலந்து கொண்டு இருக்கிறாய். நீயே பூஜையும் பஜனையும் ஏற்பாடு செய்து நடத்தியுள்ளாய். நீ அங்கு வரும்பொழுது நானும் அங்குவந்திருக்கிறேன். உன்னை பலமுறை நான் பார்த்திருக்கிறேன் என்றாள் அந்த தாய்.

அப்பொழுது ஷீலா தனக்குள் நினைத்துக் கொள்கிறாள். நான் சில நாட்களாக கோவிலுக்குச் செல்வதில்லை. கணவனின் போக்கு மனதிற்கு பாரமாக இருக்கு. வீட்டில் நிலைமையும் சரியில்லை. எனவே கோவிலுக்கு வரவில்லை.

நீ அங்கு வராததால் நான் உன்னை இங்கு வந்து பார்க்கலாம் என்று வந்தேன். நீ எப்படி இருக்கிறாய்? உன் கணவர் எப்படி இருக்கிறார்? குழந்தைகள் எல்லோரும் வழக்கம்போல் படித்து வருகிறார்களா? என்று குடும்ப விசாரணை நடத்தினாள் வந்த அன்னை மஹாலக்ஷ்மி.

இப்படி அந்த தாய் பேசியதைக் கண்ட ஷீலா மிகவும் மனம் நெகிழ்ந்து உருகிப் போனாள். அந்த அம்மாவின் வார்த்தைகள் ஷீலாவின் துக்கத்தை வெளிக் கொண்டு வந்தது. கண்களில் நீர் மல்கியது. வாயிலிருந்து வார்த்தைகள் வெயிவரத் தடைப்பட்டது. துக்கம் நெஞ்சை யடைத்தது.

ஷீலா தன் துக்கத்தை நிறுத்திக்கொண்டு தனக்கு ஏற்பட்ட திடீர் ஏழ்மையையும், கணவனின் மாறுதல்களையும் தன் தாயிடம் கூறுவது போல் மிக உருக்கமாக நடந்தது நடந்தபடி எடுத்துரைத்தாள்.

அம்மா ஷீலா! அழாதே, வாழ்க்கையில் துக்கம் வந்தால் நிச்சயம் உடனே ஒரு பெரிய சுகம் காத்திருக்கிறது என்று அர்த்தம். துன்பமும் இன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை. எனவே துக்கம் வரும்பொழுது மனம் தளராமல் கடவுளிடம் பாரத்தை போட்டு விட்டு பக்தி செய்ய வேண்டும்.

எனவே, நீ உன் கவலைகளை மறந்து எப்பொழுதும் செய்யக்கூடிய லக்ஷ்மி பூஜையை இன்னும் விமர்சையாக செய். உன் துயரங்கள் யாவும் தூர விலகும் என்றாள் அந்த அன்னை.

ஷீலா, நான் எப்படி அந்த லக்ஷ்மி பூஜையை செய்ய வேண்டும். என்று விளக்கமாக நீங்கள் எனக்கு கூறவேண்டும். ஆசி வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

ஸாக்ஷாத் ஸ்ரீ வைபவ லக்ஷ்மி தொடர்ந்து பூஜை செய்யும் முறையை விளக்கினாள்.

"லக்ஷ்மீ பூஜை" "வரலக்ஷ்மீ பூஜை" "வைபவ லக்ஷ்மீ பூஜை" என்று பல பெயர்களால் அழைக்கப்படும் ஸ்ரீ லக்ஷ்மீ பூஜையைச் செய்வது சுகம் தரும். இப்பூஜை செல்வம், மகிழ்ச்சியாவும் தரும். இந்த ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜையை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செய்ய வேண்டும். அல்லது பூஜை எடுத்துக்கொண்டு 11 அல்லது 21 வெள்ளிக்கிழமை தொடர்ந்து நம்பிக்கையுடன் செய்து விரதத்தை முடிக்க வேண்டும். பிரார்த்தித்துக் கொள்ளும் விஷயம் நிறைவேறும்.

அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு தினமும் செய்யக்கூடிய வீட்டு வேலை தெய்வ வழிபாடு இவைகளை முடிக்க வேண்டும். அன்று முழுவதும் மனதை ஸ்ரீ மஹாலக்ஷ்மியிடம் செலுத்தி 'ஜய லக்ஷ்மீ' என்று ஜபித்து கொண்டிருக்க வேண்டும். கோபப்படாமல் அதிகம் பேசாமல் இந்த ஜபம் செய்வது நல்லது. காலையிலிருந்து உபவாஸம் இருக்க வேண்டும். அன்று மாலையில் விளக்கேற்றும் நேரத்தில் பூஜையை தொடங்க வேண்டும்.

ஒரு ஆஸனப் பலகையைப் போட்டுக்கொண்டு கிழக்கு முகமாக உட்கார வேண்டும். தான் உட்கார்ந்த இடத்துக்கு முன் கோலமிட வேண்டும். அந்த கோலத்தின் மேல் அரிசியை பரத்தி சதுர வடிவில் சரிசமமாக நிரவி அதன்மேல் ஒரு கலசத்தில் பூரண கும்பம் போல் தீர்த்தத்தை நிரப்பி வைக்க வேண்டும். தீர்த்தத்தில் (ஜலத்தில்) ஏலக்காய், கிராம்பு, ஜாதிக்காய், விலாம்புச்சிவேர் போன்ற வாசனை திரவியங்களை சிறிது சேர்க்கவும். கும்பத்தின் மேல் தங்கம், வெள்ளி அல்லது சாதாரண நாணயங்களால் நிரப்பிய ஒரு தட்டை வைக்க வேண்டும். அதன்மேல் அல்லது கலசத்தின் அருகில் அஷ்டலக்ஷ்மி படத்தையும், ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ சக்ர (யந்த்ர)த்தையும் வைக்க வேண்டும். இவைகளுக்கு சந்தனம், குங்குமம், புஷ்பம் இவைகளால் அலங்காரம் செய்ய வேண்டும். பிறகு நல்லபடி பூஜையை செய்ய வேண்டும்.

ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை மனதில் த்யானம் செய்து கொண்டு அம்பிகையை அந்த கலசத்தில் யந்திரத்தில் இருப்பதாக பாவிக்க வேண்டும். தேவிக்கு செய்ய வேண்டிய எல்லா உபசார பூஜைகளையும் செய்து ஸ்ரீ வைபவ லக்ஷ்மி த்யான ச்'லோகத்தை பதினொன்று அல்லது இருபத்தி ஒருமுறை பாராயணம் செய்து கீழ்கண்டபடி த்யானித்து வேண்டிக் கொள்ள வேண்டும். " அம்மா என் கவலைகள் அனைத்தும் தீர்த்து செல்வமும் மகிழ்ச்சியையும் தந்து காத்திடு. என் போன்று எல்லோரும் வாழ அனுக்கிரஹிக்கணும் தாயே'' என்று வேண்டிக் கொள்ள வேண்டும். அன்னைக்குப் பிடித்தமான சர்க்கரை பொங்கல் அல்லது வெல்லம் போட்ட பொங்கல் நிவேதனம் செய்து பதினொரு முறை ''ஜய மாம் லக்ஷ்மீ'' என்று கூறி ப்ரஸாதத்தை கொஞ்சம் வைத்துக்கொண்டு மீதியை மற்றவர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

கும்பத்தின் மேல் வைத்துள்ள நாணயத்தையே ஒவ்வொரு பூஜைக்கும் உபயோகப்படுத்த எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்த கலசத்தில் உள்ள தீர்த்தத்தை கொஞ்சம் எடுத்து தான் உட்கொண்டு பிறருக்கும் கொடுத்து விட்டு மீதியை துளசிச் செடியில், கிணற்றில் ஊற்ற வேண்டும். கும்பத்தின் கீழ் வைத்த அரிசியை அரிசிபானைக்கடியில் வைக்கவும்.

இப்படி ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை முறையாக பூஜித்து தான் இன்பம் அடைந்து மற்ற பலரை இந்த பூஜையில் ஈடுபடுத்தினால் அம்பாள் மனமகிழ்ந்து எல்லோருக்கும் அருள் புரிவாள் என்று விஸ்தாரமாக வந்த அன்னை கூறி முடித்தாள்.

ஷீலா இதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்து அம்மா தாங்கள் கூறியபடியே நான் ஸ்ரீ வைபவ லக்ஷ்மியை பூஜிக்கிறேன். தாங்கள் ஆசி கூற வேண்டும் என்றாள்.

மேலும் ஷீலா இப்பூஜை செய்யும் முறையையும் வரலாற்றையும் கொண்ட புத்தகத்தை பூஜையை அதாவது வ்ரதத்தை முடிக்கும் அன்று முடிந்தளவு 11, 21, 51, 101 புத்தகத்தை குங்குமமிட்டு தாம்பூலத்தில் வைத்து எல்லோருக்கும் கொடுத்து மனப்பூர்வமாக அனைவருக்கும்

அன்னையின் அருள் பெற வேண்டுமென்று வேண்டிக் கொள்ள வேண்டும் என்று மாது கட்டளை இட்டாள்.

இதைக்கேட்டதும் ஷீலா உண்மையிலேயே மஹாலக்ஷ்மி பக்தையான அவள் துயரத்தைப் போக்க எண்ணம் கொண்டு தானே ஒரு சாதாரண பெண் வேடம் பூண்டு இப்பூஜையை உபதேசித்திருக்கிறாள். ஷீலா போன்ற பெண்மணிகள் மட்டுமல்லாமல் எல்லோரும் இன்பமடைய வழியையும் கூறி மறைந்தாள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை கேட்க வேண்டுமா? ஷீலாமிக்க சிரத்தையுடனும், நம்பிக்கையுடனும், பக்தியுடனும் அன்னையின் கட்டளைப்படி பூஜையை செய்ய ஆரம்பித்தாள். சிரமம் இருப்பினும் தொடர்ந்து செய்து வந்தாள். என்ன வியப்பு! அவள் குடும்பம் சில நாட்களில் பழைய நிலையை அடைந்துவிட்டது. அவள் கணவன் கெட்ட குணங்களிலிருந்து திரும்பி பொறுப்பாக நடந்து கொண்டான். குடும்பத்தில் செல்வமும், மகிழ்ச்சியும் பெருகியது. அவர்கள் மனதில் அமைதியும் நிலவியது.

ஷீலாவின் வீட்டிற்கும் பக்கத்தில் உள்ள அண்டை அயலார் எல்லோரும் அவள் ஏழ்மை நீங்கியதைக் கண்டு வியப்படைந்தனர். ஒவ்வொருவராக வந்து விசாரித்தனர். ஷீலா "ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ" வ்ரத பூஜா மஹிமையை விவரித்துக் கூறினாள். அவர்களும் செய்யத் தொடங்கினர். முன்போல் எல்லோரும் மிக விமர்சயாக ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோவிலிலும் பூஜை, பஜனை முதலியவற்றை செய்தனர். அந்நகரமே மிகவும் லக்ஷ்மீகரமாக ஆயிற்று.

ஏன் யோசிக்கிறீர்கள்? நீங்களும் இந்த ஸ்ரீ வைபவ லக்ஷ்மீ பூஜையை செய்யத் தொடங்குங்கள். உங்களுக்கும் உங்கள் சுற்றத்தினருக்கும் அன்னை காட்சி தந்து அருள் பாலிப்பாள்.

[illegible]ம்.

வைபவலக்ஷ்மி பாராயணம் செய்வதால் ஏற்படும் நன்மைகளை குறித்து ஒரு சகோதரி எழுதிய கடிதம்

Mrs. SHEILA KRISHNAN, C/o. Sh. P. Krishnan
Swamy Sadam, Match Factory Road, Dadwara, Kotajn - 324002 Rajasthan


Mrs. Sheila Krishnan
C/o Sh. P. Krishnan
Swamy Sadan
Match Factory Road
Dadwara, Kota Jn - 324002
Rajasthan.

The Publisher
Giri Trading Agency
58/2, T.S.V. Koil Street
Mylapore
Chennai-4

திருமண வயது வந்த சகோதரி ஒருவர் தனக்கு திருமணம் கைகூடவ்வும், நல்ல கணவர் கிடைக்கவும் 'வைபவலக்ஷ்மி பூஜையும் – கதையும்' புத்தகத்தில் கூறியுள்ளபடி பூஜை செய்து வந்தார். பூஜை செய்யத் தொடங்கி ஐந்தாவது வாரத்திலேயே அவருக்கு

திருமணம் நிச்சயம் ஆகி, ஒன்பதாவது வாரத்தில் திருமணம் நல்லபடியாக நடந்து சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார். இவருடைய இளைய சகோதரியும் இதே போன்று வைபவலக்ஷ்மி பூஜை செய்யத் தொடங்கினார். இப்பூஜை முடியும் முன்பாகவே 'பெண்ணைப் பிடித்து விட்டது. திருமணத்துக்கு சம்மதம்' என்று நல்ல செய்தி வந்தது. பூஜை முடிவுற்றதும் விரும்பியபடி திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இப்பூஜையின் சக்தியைக் கண்டு இவர்களுடைய குடும்பத்தினர் வியந்து பாராட்டி தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த இரு சகோதரிகளும் தங்கள் வாழ்க்கையில் சிறு சிறு பிரச்னைகள் வரும்போது வெள்ளிக்கிழமைகள் தோறும் வைபவலக்ஷ்மி பூஜையை செய்து நல்ல பயனடைந்து வருவதாகவும், இதைப்போல எல்லோரும் இப்பூஜையை செய்து நற்பயனை அடையட்டும். உங்களின் தெய்வீக சேவைக்கு மிக்க நன்றி என்று எங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இதேபோன்று பயனடைந்தவர்கள் பலர் இப்பூஜையின் மஹிமையை உணர்ந்து எங்களுக்கு கடிதம் மூலமும் நேரிலும் தெரிவித்து வருவது மிகுந்த மகிழ்ச்சியளிக் கிறது. இப்பூஜையை செய்து எல்லோரும் ஸகல சௌபாக்கியங்களையும் பெற வேண்டும என்று அம்பாளை பிரார்த்திக்கிறோம்.

ISBN No. 81-7950-077-2

SRI VAIBHAVA LAKSHMI
POOJAI & KADHAI

TAMIL

GIRI TRADING AGENCY PRIVATE LIMITED

CHENNAI

Mylapore	© (044)	2464 0376, 2494 2530
Nanganallur	© (044)	2231 1735

MUMBAI

Matunga	© (022)	2414 1344, 2414 3140
Goregaon	© (022)	2876 7298
Dombivili	© (0251)	286 1890, 244 9585
Nerul	© (022)	3952 2491
COIMBATORE	© (0422)	254 1523 (R.S. Puram)
SECUNDERABAD	© (040)	2750 3046 (Skandagiri)
KANCHIPURAM	© (044)	27224415
MADURAI	© (0452)	262 8090

Chennai Email id : giritrading@vsnl.com
Mumbai Email id : giritradingagency@vsnl.com
Website : www.giritrading.com

58th Reprint, January 2006

Price Rs.8.00